2023 ஏப்ரல் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கோரிக்கையினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புரிந்துகொண்டார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் கூறியதுபோன்று இந்தக் கோரிக்கை, நகராட்சி நிர்வாகத் துறை, பள்ளிக் கல்வித் துறை, சமூக நலத் துறை மற்றும் மருத்துவம் மற்றும் சுகாதாரத் துறை ஆகிய 4 துறைகள் சம்பந்தப்பட்டவை. நீங்கள் சொல்வதுபோன்று இந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காக அந்தத் திட்டம் நிறுத்தப்படாமலும், இதனால் எந்தத் திட்டத்திற்கும் பாதிப்பு வராதவண்ணம், பள்ளி மாணவச் செல்வங்களாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பயன்படுத்துகின்ற பொதுமக்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும், யாருக்கும் எந்த ஒரு பாதிப்பும் இல்லாதவகையில் அந்தந்தத் துறை அமைச்சர்களிடம் அந்தந்த மாவட்டத்தின் அலுவலர்கள்மூலம் பேசி, இதனை அமைப்பதற்கு சுமூகத் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20% இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி என்னவென்று சொல்லுங்கள். எதற்காக எழுந்து நிற்கிறீர்கள் என்று சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான 20 விழுக்காடு இடஒதுக்கீட்டில், வன்னியர்களுக்கு 10.5 சதவிகித. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். இப்போது நீங்கள் உட்காருங்கள். தேவையானால் நீங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்பு அளிக்கிறேன் (குறுக்கீடுகள்) இன்றைக்குதானே நீங்கள்*

அளித்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், நீங்கள் உட்காருங்கள். தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள், நான் வாய்ப்பு வழங்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான்தான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? (குறுக்கீடுகள்) அதற்கு பிறகும் உங்களுக்கு வேறு என்ன வேண்டும்? மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்கு என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தற்போதுதான் கொடுத்திருக்கிறீர்கள். அதற்கான பதில்கள் தயாரிக்க வேண்டாமா? அதன்மீதான மானியக் கோரிக்கை நாளை வரவிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாகப் பேசுங்கள். மாண்புமிகு அமைச்சர்கள் தெளிவாகப் பதில் சொல்வார்கள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் பேசிய பிறகு மாண்புமிகு உறுப்பினர் எழுந்து நின்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களை அழைத்து, பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்வதை நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். உட்காரச் சொல்கிறேன், (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் பதில் சொல்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இன்று காலையில் கொண்டு வந்து அளித்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அது மட்டுமானால், அது related ஆக உள்ளவற்றிற்கு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது ஏதும் அவைக் குறிப்பில் ஏறாது. இன்று காலையில் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொல்லியாயிற்று. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் வேறு நோக்கத்தோடு வந்திருந்தால், (குறுக்கீடுகள்) நீங்கள் எது பேசினாலும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) ஏதோ, நீங்கள் அரசியல் செய்ய வேண்டுமானால் வெளியே சென்று செய்யலாம். (குறுக்கீடுகள்) உள்ளே அரசியல் செய்ய வேண்டாம். இது அரசியல் செய்வதற்கான இடம் அல்ல. (குறுக்கீடுகள்) இது மக்களின் பிரச்சினைகளைப் பேச வேண்டிய இடம். (குறுக்கீடுகள்)

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

காலையில் 10–00 மணிக்கு ஒரு paper*–ஐ என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, 11–30 மணிக்கு இங்கு வந்து பேசுவது நாகரிகம் அல்ல; (குறுக்கீடுகள்) அவை மரபு அல்ல; இது ஜனநாயக உரிமை அல்ல; தயவுசெய்து உட்காருங்கள், (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் நான் எடுத்துக்கொள்கிறேன் என்று சொன்ன பிறகும் நீங்கள் இவ்வாறு செய்தால், அவையை மீறிய செயலாகும். அவையை மீறிய செயலை செய்யக் கூடாது. அரசியல் செய்கிற இடம் இது அல்ல. நீங்கள் அரசியலுக்காக பேச வேண்டிய இடம் இது இல்லை.*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று ஏதோ பேசினர். உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள் இரண்டு கைகளையும் நீட்டி பேசினார்.)

முற்பகல் 11–35

அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள். தயவுசெய்து எல்லோரும் உட்காருங்கள் சொல்கிறேன். நீங்கள் மூத்த உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். நன்றாக படித்தவர்கள். நீங்களும் ஆசிரியராக இருந்தவர். நீங்கள் காலையில் என்னிடம் கொடுத்துவிட்டு, உடனே இங்கு வந்து விவகாரம் செய்வது நியாயமில்லை. நீங்கள் பேசுவதில் ஏதோ நோக்கம் இருக்கிறது, எனக்குத் தெரியவில்லை. ஏதோ நோக்கத்துடன் பேசுகிறீர்கள். அரசியல் செய்ய வேண்டிய இடம் இந்தப் பேரவை அல்ல. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடையதை எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று அவர் சொல்லவில்லை. உங்களது உரிமையைக் கேட்பதற்கு உங்களுக்கு உரிமையுண்டு. ஆகையினால், நாளைக்கு அவர் எடுத்துக்கொள்கிறேன் என்கிறார்.* Demand *இருக்கிறது.* Demand*–லும் எடுத்துக்கொள்கிறோம், தனியாகவும் பேச வாய்ப்புக் கொடுக்கலாம். இன்றைக்கு காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். உடனே செய்யுங்கள் என்றால் எப்படி முடியும்? நீங்களே சொல்லுங்கள். மற்றவர்கள் என்றால்கூட அவர்கள் புதியவர்கள் என்று சொல்லலாம். திரு. மணி, நீங்கள் பண்பட்டவர், எல்லாம் தெரியும் உங்களுக்கு. நீங்களே இப்படி செய்தால் எப்படி?*

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

3. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(இ) மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான 20% இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5% உள் ஒதுக்கீடு நடைமுறைப்படுத்துதல்—*தொடர்ச்சி*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு ஏதோ பேசினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவைக்கு இடையூறு செய்யாதீர்கள். நீங்கள் உங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்ய வேண்டுமென்றால் நீங்கள் வெளிநடப்புச் செய்துகொள்ளலாம். அது உங்களுடைய விருப்பம். அது உங்களுடைய உரிமை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும்.*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு ஏதோ பேசினர்.)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *எழுந்து நின்று அவைக்கு இடைஞ்சலாக இருப்பதை இந்த அவை ஒத்துக்கொள்ளாது. தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு ஏதோ பேசினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் எச்சரிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)* Zero Hour *முடிந்து அடுத்த நிகழ்விற்கு வந்தாகிவிட்டது. உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு)*

2023 ஏப்ரல் 12] [பேரவைத் தலைவர்]

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டு ஏதோ பேசினர்.)

உட்காருங்கள் எல்லோரும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்தால் அனைவரும் உட்கார வேண்டும். தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவதெல்லாம் அவைக் குறிப்பில் வராது. தயவுசெய்து அமைதியாக அமருங்கள்.

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(அ) சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2023 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*